உ

சிவமயம்.

ஸ்ரீ தண்டபாணி துணை.

# பழனியாண்டவர் ஞாவலி.

## முதல்பாகம்.



பழனியாண்டவர்.

விலை அணா - உ.

உ

சிவமயம்.

ஸ்ரீதண்டபாணிதுணை.

# பழனியாண்டவர்

## ஜாவளி.

பழனிஸ்தலம்
மு - வேலாசாரியாரவர்கள்குமாரர்
வே - மௌனகுருருத்திரமூர்த்தி
ஆசாரியாரவர்களால்
இயற்றப்பட்டு,

திரிசிரபுரம் - சங்கீதவித்துவான்
முத்துசாமி ஆசாரியார்
அவர்களால்ராகதாளங்கள்
பரிசோதிக்கப்பட்டு.

சித்தூர்.

வீராசாமி நாயுடு

அவர்களால் தமது வித்தியாவினோத
அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

மூன்றாம்பதிப்பு - காபி-௲.
முன்யிருந்தஜாவளிகளுடன் நூதனமாக
௰௧-ஜாவளிகள் சேர்த்திருக்கின்றது.
1883 ௵.

ரிஜஸ்டர் காபிரயிட்.

இதன் விலை - அணு - உ.

உ

# விளம்பரம்.

—()—

இதனல்சகலமானவர்களுக்கும் தெரியப்படுத்துவதுஎன்னவென்றால் பழனிஸ்தளத்தில் வசிக்கும் தமிழ்சக்கிரவர்த்தியாகிய-ம-ா ா-ஸ்ரீ மு - பாம்பழக்கவிச்சிங்கநாவலர் - அவர்களால்இயற்றிய- கீதாமிர்தசாரமென்னும் - கீர்த்தனையும் - பழனி ஆண்டவர்ஜாவளியும்- நடேசர்ஜாவளியும் இரங்கநாயகர்ஜாவளியும் - திருப்பதி - தேர்வண்டிக்கால்சரித்திரகீர்த்தனையும் - இதுகளை - கெவர்ன் மெண்டாரால் - 1867 - ஷுத்திய - 25 - வது. ஆக்டின் - 20 - வது - பிரிவில் - 6 - வது. விதியின்படி - ரிஜஸ்டர்செய்து (ஆல்ரயிட்ரிஜர்வ்ட்) ஆகியிருக்கின்ற படியால்- இதுகளை - எந்த அச்சுக்கூடத் தலைவர்களும் மற்றவர்களும் - சித்தூர் வீராசாமிநாயுடு அவர்களுடைய அனுமதிபெற்றுக்கொள்ளாமல் - எவ்விதத்திலும் - எவ்விதபாஷையிலும் - மொழிபெயர்த்து அச்சிடகூடாது - அப்படிமீரி அச்சிடுவாராகில் - மேல்கண்ட ஆக்டின்பிரகாரம்-கோர்டார்மூலமாய்சட்டப்படி - விதிக்கப்பட்டநஷ்டத்திர்க்கும்தெண்டனைக்கும் உட்படுவார்கள்.

மேலும் ம-ா-ா- ஸ்ரீ சுப்பரமணிய பண்டிதர்போட்ட பதார்த்தகுணசிந்தாமணியை அச்சுக்கூடத்தலைவர்கள் இரண்டுபதிப்பு - வரயில் - அச்சிட்டார்கள் மூன்றும்பதிப்பு - அச்சிடும்போதுமேல்படி பண்டிதர் - வழக்கிட்டு - எம்மாதிரியாககோர்டார்மூலமாய் - தீர்மானம் - பண்ணிக்கொண்டாரோ - அம்மாதிரிபாகனுன் வழக்கு - தொடுக்கப்படும் - ஆகையால் இந்தவிளம்பரத்தில் விவரமாகதெரிவித்தேன்,

இப்படிக்கி

சித்தூர்

வீராசாமிநாயுடு

வித்தியாவினோத அச்சிக்கூடத்தலைவர்

## புஸ்தகவிளம்பரம்.

இதனலன்பர்கள் யாவருக்கும் தெரியப்படுத்துவதுயென்னவென்றால்சென்னப்பட்டணம் - புரசைபாக்கத்தைச்சார்ந்த நாராயணபாளயம்வடமலைப்பிள்ளைவீதியி - உ - வது நெம்பருடைய வீட்டில் வித்தியாவினோத அச்சுக்கூடத்தலைவராகியசித்தூர் வீராசாமிநாயுடு யிடத்திலும் - அவியாருடைய குமாரர் - சி - வி - கேசவுலுநாயுடு அவர்களால்- கோயமுத்தூர் - பெரியகடைவீதியில் வைத்திருக்கும் - புஸ்தகஷாப்பில் தமிழ் - தெலுங்கு - கிரந்தம் - மகம்மதுபுராணக்கள் பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய வைதிய சில்லறைகளும் - சோதிடசாஸ்திரங்களும் விலைசாசமாய் விர்ப்பனைசெய்து வருவதால் - வியாபாரிமுதலானவர்கள் மேற்கண்டயிடங்களில் - விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கி

சி - வி - கேசவுலுநாயுடு.

குமூஸ்தா இ- ஒன்னையகவுண்டர்

உ

ஸ்ரீதண்டபாணிதுணை.

# பழனியாண்டவர்ஜாவளி.

ஹடம்யாலனேயே-விடராயுனிக்கிந்த
என்றஜாவளியின்வர்னமெட்டு
க-இராகம்-இந்துஸ்தானிகாபி-சாபுதாளம்

பல்லவி.

எனேயாள்குகனே-உனேயேதினம்நம்பும்
எனேயாள்குகனே.

அநுபல்லவி.

கனசம்ப்ரமகாங்-கயனேமகிழ்வா (யெனேயாள்)

சரணங்கள்.

சுரர்பூஜிதனே-சுகுணாலயசிவ
வரதாசுகமா-மணியேமகிழ்வா (யெனேயாள்)
அமராபதிநா-யகனே திருவளர்
சமராபுரிவாழ்-சரதாமகிழ்வா (யெனேயாள்)
மறைமாமுதலே-வடிவேலவனெனும்
இறைவாகுழகா-குறைதீர்மகிழ்வா (யெனேயாள்)
மௌனகுருருத்-திரமூர்த்திதுதிசெய்
புனிதாபுகழ்சேர்-புலவாமகிழ்வா (யெனேயாள்)

செலிமனக்யாலவானி-தோனுபொந்து-சாலுநே
என்றஜாவளியின்வர்னமெட்டு
உ-இராகம்-இந்துஸ்தானிகாபி-இந்துஸ்தானி-ஆதிதாளம்

பல்லவி.

திருவருள்செய்விநோத-ஞானகந்தசாமியே
திருவருள்செய்விநோத

அநுபல்லவி.

ஞானகந்தசாமியே-மா
மோனதண்டபாணியே (திருவருள்)

சரணங்கள்

இந்தவேளைதனிலெந்தனை-வந்துபாதுகாரையா
வந்துபாதுகாரையா-நீ-வந்திடர்களிதீரையா (திரு)
உன்னையேநானம்பினேனே-உற்றதுணையிங்கில்லையே
உற்றதுணையிங்கில்லையேஒ-ருறுதியாகிலுஞ்சொல்லையே (திரு)
நத்தினேனுனைநித்தியமும்-முத்திதருவாய்மெய்யா
முத்திதருவாய்மெய்யாவுன்-சித்தமிரங்காதேதையா (திரு)
மௌனகுருருத்ரமூர்த்தி-தினமும்போற்றும்பாதனே
தினமும்போற்றும்பாதனே-யென் றீவினைமாற்றும்நீதனே (திரு)

---

ஏமிஸேதுஎடுலஸைது-மருலுதாளலேனுரா

என்றஜாவளியின்வர்ணமெட்டு.

ரு-இராகம்-கமாஸ்-ரூபகதாளம்

பல்லவி.

சாமிவாதுசெய்வதேது-சமயம்பாதுகாரையா
சாமிவாதுசெய்வதேது.

அநுபல்லவி.

பூமிபுகழ்பழனிநாதா - நீ
புனிதனேயெப்போதும்நீதா (சாமி)

சரணங்கள்.

ஞானதேசிகாவிநோதா-தானருள்செய்திடும்போதா
வானவர்பணியுகளபாதா-நீ-மன-திரங்கியிப்போது (சாமி)
வரவாவென்மனதுவாடி-மயக்குகிறேனுனையா
சரவணபவதேவதுய்யா-நீ-தமி-யேன்மீ-தினி-யிப்போது (சாமி)
மௌனகுருருத்ரமூர்த்தி-வாழ்த்துஞ்செந்தமிழ்மாவிலாசா
கனகதேகவள்ளிநேசா-நீ-காலா-யுதா-வேலா-இப்போது (சாமி)

---

சின்னதானரா-நே-சின்னதானரா

என்றஜாவளியின்வர்ணமெட்டு.

சு-இராகம்-இந்துஸ்தானிகாபி-ரூபகதாளம்

பல்லவி.

கந்தநாயகா-ஓ-கந்தநாயாக

அநுபல்லவி.

சொந்தமாகவந்துமெந்தன்
சிந்தையினேய்திரையா-ஓ (கந்தநாய)

சரணங்கள்

சந்ததம்நின்றுளைநம்பும்-மைந்தன்மீதுசண்முகா
இந்தவேளைகருணைசெய்வாய்-சுந்தரகூர்வேலவா-ஓ (கந்தநாய)

பத்திநித்தஞ்செயவறியாச்-சுத்தமூடனென்னினுமுன்
சித்தமகிழ்ந்தருள்செய்வா-யத்தனேகூர்வேலவா-ஓ (கந்தநாய)

மௌனகுருருத்ரமூர்த்தி-தினமும்போற்றுந்தேசிகா
சௌனகாதிமுனிவர்பாவுங்-கனசிவகிரிவேலவா-ஓ (கந்தநாய)

---

போபோமனே-பொம்மனே-பாமரோவாணி

என்றஜாவளியின்வர்ணமெட்டு

ரு-இராகம்-கமாஸ்-இந்துஸ்தானி ஆதிதாளம்

பல்லவி.

வாவேலனே-மன்னனே-மாமயிலேறி
வாவேலனே-மன்னனே

அநுபல்லவி.

பாவலர்பணிகுகா-பராசுதனேஎன்முன் (வாவேலனே)

சரணங்கள்,

சதகாலமுமுனைத்-தஞ்சமென்றெண்ணினேன்
பதிதபாவனஞான-பரமகுருவேஎன்முன் (வாவேலனே)

சுரசேகரனே-தூயவினோதனே
சரவணபவசிவ-சாமியேநீஎன்முன் (வாவேலனே)

மவுனகுருருத்-திரமூர்த்திபோற்றுஞ்
சிவகிரிநாதாநீதா-சித்தமிரங்கிஎன்முன் (வாவேலனே)

---

யாலாமனக்குவானிஜோலி-செலி
என்றஜாவளியின்வர்னமெட்டு.
சு-இராகம்-இந்துஸ்தானிகாபி-இந்துஸ்தானி ஆதிதாளம்
பல்லவி.

வேலாஎனக்குவரந்தாதா-வடி
வேலாஎனக்குவரந்தாதர

சரணங்கள்.

வேலாசிலா-வீரிபாலா
காலாயுதம்நீள்-கையாமெய்யா
காலாரணமும்-நவில்வோனேவடி (வேலாஎனக்)
நாதாநீதா-நம்புமெனமேல்
வாதாசூதா-வந்தருள்செய்வாய்
போதாவேதா-பூமானேவடி (வேலாஎனக்)
மௌனகுரு-ருத்ரமூர்த்தி
தினமும்போற்றுஞ்-செம்பொற்பாதா
கனிவுடனே-காத்தருள்வடி (வேலாஎனக்)

---

பொத்தையாயிகசாலுரா - சாமிகா
என்றஜாவளியின் வர்னமெட்டு.
எ - இராகம்-செஞ்சுருட்டி-இந்துஸ்தானி-ஆதிதாளம்.
பல்லவி,

முத்தையகுகநாயகா - மாசுகா
முத்தையகுகநாயகா

அநுபல்லவி,

சுத்தமெய்ஞ்ஞானதீபா சுந்தரரூபா
சத்திவடிவேலவா மாசுகா
சத்திவடிவேலவா திருவளர்
சத்திவடிவேலவா முத்திதரும் (முத்தையா)
பாவலர்பணிதாளா பன்னிருதோளா
தேவசேனுபதியே மாசுகா
தேவசேனுபதியே சுபகா
தேவசேனுபதியே சித்திதரும் (முத்தையா)
இன்னங்கொடுமையேது என்மீதிப்போது
வன்னமயில்வாகனு மாசுகா
வன்னமயில்வாகனு நடமிடும்
வன்னமயில்வாகனு சத்திவளர் (முத்தையா)

பத்தியாய்மௌனகுரு ருத்திரமூர்த்தி
நித்தமும்புகழ்பாதா மாசுகா
நித்தமும்புகழ்பாதா மகிழ்வுடன்
நித்தமும்புகழ்பாதா அத்துவித (முந்தையா)

---

கெடிகெடி-எகுஜாலமா-கெடிகெடி

என்றஜாவளியின்வர்ணமெட்டு.

அ-இராகம்-கமாஸ்-சாபுதாளம்

பல்லவி

மாகத-மயில்வாகனு-மாகத

அநுபல்லவி.

வந்தருள்வா-யிதுசமயம்

சரணங்கள்

வேதவந்திதலோல-வேன்முருகேசா
போதாசகுண-புகழ்ப்பிரகாசா (மாகத)

தஞ்சமுனையல்லாது-தானும்வேறேது
பஞ்சைமேல்வாது-பண்ணுதல்சூது (மாகத)

மௌனகுருருத்ர-மூர்த்திநற்பாவாற்
றினமும்போற்றுஞ்-சின்மயதேவா (மாகத)

போவேசெலி-போவேசெலி-போவேபோவே போவே போவே
செலி-போபோவே போவேபோவேசெலி-லலனு-போவேசெலி
மகுவா-போவேசெலி-சகியா-போவேசெலி- சுததி-போவேசெலி

---

என்றஜாவளியின்வர்ணமெட்டு

கூ-இராகம்-மோஹனகல்யாணிசாபுதாளம்

பல்லவி

தாதாகதி-தாதாகதி-போதா-வேதாநீதா-தாதாகதி
பூமானேநாதா-தாதாகதி-குமரா-தாதாகதி-குகனே
தாதாகதி-முருகா-தாதாகதி-துரையே-தாதாகதி

அநுபல்லவி,

வாதாஞானவிநோத வேலாததி (தாதாகதி)

சரணங்கள்.

சதுர்மறைபுகழுஞ் - சாமிசுகுணசீலா
பதிதபாவனஞான-பரமசற்குருவே
வாதாஞானவிநோத வேலாததி (தாதாகதி)

சதகாலமுனேயே-தான்பணியுமென்மீது
மிதமாயிருக்கலாமா-மெய்யாசற்குருவே
வாதாஞானவிநோத வேலாததி (தாதாகதி)

மௌனகுருருத்ர-மூர்த்தியைக்காக்கும்
கனசுப்ரமண்யனே-கந்தாசற்குருவே
வாதாஞானவிநோதா வேலாததி (தாதாகதி)

---

மானினிமனஸ்யாலகரகதே - ஓமானினி

என்றஜாவளியின்வர்னமெட்டு.

ய - இராகம் - கமாஸ் - ரூபகதாளம்.

வேலனேயென்னையாளத்ததியிதே
வேலனேயென்னையாளத்ததியிதே

அநுபல்லவி,

கனிவுடனினிக்-கைவிடாமலே (ஓவேலனே)

சரணங்கள்.

வரவரவென் மனம்வாடுதே
சாதஞான சாமியே (ஓவேலனே)

என்னவித மினியுய்வேன்
தன்மமோசு தாயகா (ஓவேலனே)

மௌனகுரு ருத்திரமூர்த்தி
தினமும்போற்றும் தேசிகா (ஓவேலனே)

---

அந்தலோனேதெல்லவாறே-லலனஏமிசெய்துனே
என்றஜாவளியின்வர்ணமெட்டு
கக-இராகம்-இந்துஸ்தானிபியாஹ்-ரூபகதாளம்

பல்லவி.

இந்தவேளையெந்தன்மீது
என்னகோபமுத்தையனே

அநுபல்லவி.

சந்ததமன்பர்-வந்தனைசெய்யுந்
தாமயுகளபாதனே
செந்திருவளர்-கந்தகளப்
திண்புயகுகநாதனே (இந்தவேளை)

பத்தியாகவே-துத்தியஞ்செயும்
பாவலர்க்கருள்தாயகா
சத்திவேலனே-முத்திதந்தருள்
சண்முகாகந்தநாயகா (இந்தவேளை)

கஞ்சனையன்று-வன்சிறைவைத்த
கர்த்தனேமறைமூலனே
வெஞ்சமர்செய்த-வஞ்சசூரனை
வென்றகூர்வடிவேலனே (இந்தவேளை)

செந்தமிழ்க்கவிமௌனகுருருத்
திரமூர்த்திக்கனுகூலனே
வைபந்தமிழ்மணங்-கமழ்சிவகிரிப்
பரமனேவள்ளிலோலனே. (இந்தவேளை)

---

சாமிராடேமந்துனே-சானரோ-தோடித்யாவே
என்றஜாவளியின்வர்ணமெட்டு
௰உ-இராகம்-இந்துஸ்தானிபியாஹ்இந்துஸ்தானி-ஆதிதாளம்

பல்லவி.

கூர்வடிவேற்கந்தனே-குமரா-எனையாள்வாய்
கூர்வடிவேற்கந்தனே

அநுபல்லவி.

பார்வதிசு-பாலசுந்தரா-ஓ
குமரா-எனையாள்வாய் (கூர்வடி)

சரணங்கள்.

அம்புவியோர்வந்துதாழுஞ்-செம்பொற்பாதனே
தூயக-தம்பநாதனே-குமரா-எனையாள்வாய் (கூர்வடி)
இந்தவேளைவந்துனதடி-தந்தருள்வாயே
ஞானசு-கந்தருஞ்சேயே-குமரா-எனையாள்வாய் (கூர்வடி)
மௌனகுருருத்ரமூர்த்தி-தினந்துதிசுகா
கோறிய.கனந்தருமஹா-குமரா-எனையாள்வாய் (கூர்வடி)

---

மானபிமானமு-ஆ தனிதே-தனிதே-மா
என்றஜாவளியின்வர்ணமெட்டு.
கரு-இராகம்-கமாஸ்-சாபுதாளம்

பல்லவி

வேதசுபூஜித

அநுபல்லவி.

மா-தவனே-தவனே-தவனே (வேதசுபூஜி)

சரணங்கள்.

சதாஞானகுமர-சாமிசண்முகசீலா
வரஞானகூர்-வேலனே-வேலனே-வேலனே (வேதசுபூஜி)
சரணமேகதியெனச்-சந்ததமும்நம்பினேன்
துரைராஜகூர்-வேலனே-வேலனே-வேலனே (வேதசுபூஜி)
மௌனகுருருத்ர-மூர்த்திதனைக்காக்குங்
கனநிதகூர்-வேலனே-வேலனே-வேலனே (வேதசுபூஜி)

சானரோவானிபாலினே-நெடுமலலைதுனே
என்றஜாவளியின்வர்னமெட்டு
கச-இராகம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்

பல்லவி.

குமராஞானதேசிகா-திருவருள்செய்குவாய்
குமராஞானதேசிகா

அநுபல்லவி.

தேவர்பூஜிதசரணா-தீரவீரவேலனே (குமரா)

சரணங்கள்.

அனவரதமுமுனதுபாதம்-அண்டினேனென்மெய்யனே
மனமிடிதனை நீக்கியாளும்-மாதவகுகதுய்யனே (குமரா)

சரவணபவமயில்வாகன-சாமிசுகுணசீலனே
கரகமுனிவன்றுதிசைதந்ய-கர்த்தனனலோலனே (குமரா)

மௌனகுருருத்ரமூர்த்தி-வந்தனைசெயும்பாதனே
சௌனகாதிமுனிசேவித்-தாயகாவிநோதனே (குமரா)

---

காந்தனைக்கரத்தாரோபிட்டிரலாரோ
என்றஜாவளியின்வர்னமெட்டு
கடு-இராகம்-கமாஸ்-சாபுதாளம்

பல்லவி.

எந்தனக்கருள்தாதாசண்முகதேவா

சரணங்கள்.

சொந்தமாகினேனேவந்துசம்ப்ரமமாக
சிந்தைநோய்தனைமாற்றி-நாளும் (எந்தனக்கருள்)

மாயாவிகாரத்தா-லோயாமலலைவேனே
தூயாபராமுகமேன்-நாளும் (எந்தனக்கருள்)

மௌனகுருருத்ர-மூர்த்திதமிழ்ப்படி
தினமுங்கருணைசெய்யுந்-தேவா (எந்தனக்கருள்)

போபோவே-செலியா-போபோவோ-செலியா
என்றஜாவளியின்வர்ணமெட்டு

கசு-இராகம்-செஞ்சுருட்டி-இந்துஸ்தானி-ஆதிதாளம்

பல்லவி.

வாவா-மா-குமரா வாவா-மா குமரா

அநுபல்லவி.

தேவா என்முன் (வாவாமா)

சரணங்கள்.

நத்தினேனென்னையாளுஞ்-சத்திவடிவேலவா
சித்தமிரங்கியே-தேவா என்முனு (வாவாமா)

ஞானசண்முகா-தீனதயாபரா
மோனதேசிகனே-தேவா என்முன்
மௌனகுருருத்ர-மூர்த்திதன்மீது
மனதிரங்கியே-தேவா என்முன் (வாவாமா)

---

மானினிவானிஜோலி-தானனுலேகா
செலி-தானனுலேகா-தேவா-மானினி
என்றஜாவளியின்வர்ணமெட்டு

கஎ-இராகம் செஞ்சுருட்டி-இந்துஸ்தானி-ஆதிதாளம்

பல்லவி.

வேலனேசாமிநாதா-பாலன்மேல்வாதா
தினம்-பாலன்மேல்வாதா-தேவா-வேலனே.

அநுபல்லவி.

ஞாலமெல்லாம்-போற்றுமுந்தன்
நளினபாதம்-நம்பினேன் (வேலனே)

சரணங்கள்

குருபராகதி-தானருளும் மாரகதமாயூரனே

திருமருகா-மா-திருமருகா
சருவலோகநாயகா-குகா-வீரனே. (வேலனே)

வேதனேசிவ-மாமலைவாழ்-போதகுருநாதனே
பாதமருள்-நின்-பாதமருள்
மேதினியெலாம்புகழும் நீதனே (வேலனே)

மெனகுருருத்திரமூர்த்திதினமும்போற்றும்பாதனே.
கனிவுடனே-நீ-கனிவுடனே
எனக்குன்னருள்தந்திடுவாய்-சீலனே. (வேலனே)

பருவாஞே-பாராஞே-பருவாஞே- பாராஞே

என்றஜாவளியின்வர்ணமெட்டு.

௧௮-இராகம்-கமாஸ்-இந்துஸ்தானி-ஆதிதாளம்.

பல்லவி.

வருவாயே-வேலோனே-வருவாயே வேலோனே

சரணங்கள்.

சரதவிநோதனே-சதுர்மறைதுதிசெயும்
பரமநாததிருப்-பழனிக்குகனே (வருவாயே)

சுரர்முனிபூஜித துணைமலர்ப்பாதனே.
சரவணபவமா-சாமிகுகனே (வருவாயே)

மௌனகுருருத்ர-மூர்த்தியெந்நாளும்
மனதினிற்றுதிக்கும்-வரதகுகனே (வருவாயே)

வா-டெடுபால்-கெனுதேல்-பவே-வா-டெடுபால்

என்றஜாவளியின்வர்ணமெட்டு.

௧௯-இராகம்-இந்துஸ்தானிகாபி-சாபுதாளம்

பல்லவி.

நீ-வருவாய்-முருகேசனே-நீ-வருவாய்.

அநுபல்லவி,

நீவருவாய்-முருகேசனே
பூமனே-மாமயிலேறியே (நீவருவாய்)

சரணங்கள்.

மன்னவனேசுந்தர-சண்முகா
மா-மால்மருகா-மாமால்மருகா
மாமால்மருகாநாளும்-வாதாஎந்தன்முன்னே (நீவருவாய்)
சந்ததம்-நானம்பினகந்தனே
மா-சாமிகுகா-மாசாமிகுகா
மாசாமிகுகாநாளும்-வாதாஎந்தன்முன்னே (நீவருவாய்)
இன்னமும்-வன்மமெனை-தேசிகா
மா-வரகனே-மாவேரகனே
மாவேரகனேநாளும்-வாதாஎந்தன்முன்னே (நீவருவாய்)
மவுன-குருருத்ர-மூர்த்தி
நான்-வாழ்த்தும்பதா-நான்வாழ்த்தும்பதா
நான்வாழ்ந்தும்பதாநாளும்-வாதாஎந்தன்முன்னே (நீவரு)

---

சாமிகாநாதோ-மாட்லாடாதெந்துகுரா
என்றஜாவளியின்வர்னமெட்டு

உஉ-இராகம்-காமாஸ்-இந்துஸ்தானிஆதிதாளம்

பல்லவி.

ஞானதேசிகா-வாதா-ஓ-சுந்தரமின

சரணங்கள்.

சரவணபவதேவா-தாரகமயசிவ
வரதாப்பழனிவேலவா (ஞானதேசிகா)
திருவளர்குகநாதா-சித்தமிரங்கியென்முன்
வருவாயேகூர்வேலவா (ஞானதேசிகா)
மௌனகுருருத்ர-மூர்த்திதினம்போற்றுங்
கனநீதவடிவேலவா (ஞானதேசிகா)

இந்துமுகிவானிகிமன-சித்துலேதாயா-எமந்துநேமாயா
என்றஜாவளியின்வர்ணமெட்டு

௨௧-இராகம்-இந்துஸ்தானிபியாஷ்-ரூபகதாளம்

பல்லவி.

தஞ்சமுன்றன்பா தமேகதி-சதுர்மறைமூலா
நற்கதிதரும்வேலா

அநுபல்லவி.

வஞ்சவரக்கரஞ்சியோடமுன்-வதைத்திட்டசீலா
தேவ-குஞ்சரிமணமருவுமிங்கித
குருபரலோலா-பூங்-கோமளமேலா (தஞ்சமுன்)

நம்பினேனைக்கைசோரவிடுதல்-ஞாயமோமெய்யா
சிவ-தப்பிரானுக்குக்குடிலைப்பொருள்முன்
சாற்றியதுய்யா.நீ-தற்கார்முருகையா (தஞ்சமுன்)

அண்டுமெந்தனக்கின்பசுகந்தந்-தாளலாகாதா
நிதந்-தொண்டுபுரியுமடிமையென்றெனைத்
தோணுதோவேதா-அத்-துவிதமெய்ப்போதா (தஞ்சமுன்)

மௌனகுருருத்ரமூர்த்திசெந்தமிழ்-மலர்புனைவாகா
குற-வனிதைதழுவும்மங்களாகார
வரதவிசாகா-நல்-வழியருள்த்யாகா (தஞ்சமுன்)

---

ஆயிரிமா-பன்ஸி-நாகி
என்றஜாவளியின்வர்ணமெட்டு

௨௨-இராகம்-கமாஸ்-இந்துஸ்தானி-ஆதிதாளம்

பல்லவி.

வேலவனே-என்முன்-வாவா

அநுபல்லவி.

சாதசுகா - என்முன் - வாவா (வேலவனே)

சரணங்கள்.

ஞானவிநோதா-மோனவதீதா
தானவனே-என்முன்-வாவா (வேலவனே)

சூர்குலகாலா-தூயவிசாலா
தாரகனே-என்முன்-வாவா (வேலவனே)
மௌனகுருருத்ர-மூர்த்தியென்நாளும்
வாழ்த்தும்பதா-என்முன்-வாவா (வேலவனே)

---

ஓ-ரமணிமணிசாமினிதேவே
சாமினிதேவே-காமினிபோவே
என்றஜாவளியின்வர்னமெட்டு.
உரு-இராகம்-கமாஸ்-ரூபகதாளம்

பல்லவி.

வாரணகேதன-கோமளதேகா
கோமளதேகா-தாமவிசாகா

அநுபல்லவி.

ஆரணரூபா-காரணதீபா
பூரணதீப-வீரப்ரதாபா (வாரணகே)

சொன்னதுகேளா-தென்னபொற்றுளா
பன்னிருதோளா-என்னைநீயாளா (வாரணகே)

நொந்துளம்வாடி-யுந்தனைநாடி
செந்தமிழ்பாடி-வந்தனன்றேடி (வாரணகே)

குஞ்சரிபாகா-தஞ்சம்வைபோகா
வஞ்சகமாகா-ரஞ்சிதயோகா (வாரணகே)

கல்வியுண்டாக்கு-கலியைப்போக்கு
வல்வினைநீக்கு-வந்தருள்தேக்கு (வாரணகே)

மவுனகுரு-ருத்திரமூர்த்தி
தினமும்போற்றுஞ்-சிற்பராசீர்த்தி (வாரணகே)

---

சாமிவேளகாதுரா சாமிவேளகாதுரா
என்றஜாவளியின்வர்னமெட்டு
உச இராகம்-இந்துஸ்தானிகாபி-ரூபகதாளம்.

பல்லவி.

சாமிபாதுகாரையா-சாமிபாதுகாரையா

அநுபல்லவி.

பூமியெல்லாம் போற்றும்பாதனே
பூசுரர்க்கருள் போதகீதனே (சாமிபாது)
அத்துவித முத்தையலோலா
முத்திதர நத்தினேன்வேலா (சாமிபாது)
ஞானவரத ஞானதுய்யனே
வானவர்பணி மோனசேயனே (சாமிபாது)
மௌனகுரு ருத்ரமூர்த்தி
தினந்துதிசெய் செந்திலாதிபா (சாமிபாது)

---

பேகோ-ஜெமுனுமே-பஸ்காயோ-பனசீரி
என்றஜாவளியின்வர்னமெட்டு.
௨௫-இராகம்-கமாஸ்-சாபுதாளம்.
பல்லவி.

வேலாயுதநாதா-வருவாயே-கதிநீயே
அநுபல்லவி.

சிலமுருகேசா-கோலஜெகதீசா (வேலா)
சரணங்கள்.

மேலோர்வாழ்த்தும் வேதவிநோதா
காலாயுதா காரணஞானகுமரா (வேலா)
சிந்தாகுலந் தீர்த்திங்கோரங்
கந்தாவந்தாள் காரணஞானகுமரா (வேலா)
மௌனகுரு ருத்ரமூர்த்தி
கனிவுடன்சொல் காரணஞானகுமரா (வேலா)

---

சாமிகாநதோ மாட்லாட தெந்துரா
என்றஜாவளியின்வர்னமெட்டு
௨௬-இ ம்-கமாஸ்-தாளம்-இந்துஸ்தானி-ஆதி.
பல்லவி.

சண்முகன்வடிவேலாயுதந்துனே.
சரணங்கள்.

விண்ணவர்துயர் தீர்த்து விளங்குமெய்ஞ்ஞானசுப்ர
மண்யதண்டாயுதன்சதா (சண்முகன்)
பாதாடமாயூரப் பரிமிசையுலவிய
சரததண்டாயுதன்சதா (சண்முகன்)

மௌனகுருருத்ர மூர்த்திநேர்சரவண
பவசுதண்டாயுதன்சதா (சண்முகன்)

கெடிகெடிபெகுஜாலமா-கெடி
என்றஜாவளியின் வர்ணமெட்டு
உஎ - இ - ம் - கமாஸ் - தாளம் - சாபு
பல்லவி.
பரங்கிரிக்குமரேசனே பரங்
அநுபல்லவி.

பரிவுடனின் பதமருள்வாய் (பரங்கிரி)
கஞ்சன்றனைக்குட்டிய காங்கேயநாதா
வஞ்சகமேது மறைபுகழ்பாதா (பரங்கிரி)
தெய்வகுஞ்சரிவள்ளி சேர்மணிமார்பா
வையகம்போற்றும் மணமலர்நீபா (பரங்கிரி)
மௌனகுருருத்ர மூர்த்தியைக்காக்குஞ்
சிவசண்முகனே தீவினைநீக்கும் (பரங்கிரி)

---

மானினிவானிஜோலி - தானனுனேகா - செலி
என்றஜாவளியின்வர்ணமெட்டு
உஅ-இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-இந்துஸ்தானிஆதி
பல்லவி.
ஞானதேவாகுமாரா-கானமாயூரா திகழ்
கானமாயூரா-வீரா-ஞான
அநுபல்லவி
வானவர்கள் வந்துதாழும்
மலர்ப்பதசேவை தந்தருள் (ஞான)
சரணங்கள்.

திருவளர்குறு மாமுனிக்கன்
றரும்பொருள்சொன்ன வாயனே
பருவறல்தீர்என் பருவறல்தீர்
தருவெனவளருங்கார்த்தி கேயனே (ஞான)
சரவணபவ குகநாயகா
பரங்கிரிமுரு கேசனே
வரமருள்வாய்நல் வரமருள்வாய்
தரணிபுகழ்சுயம்ஜோதிப்ர காசனே (ஞான)

மௌனகுரு ருத்ரமூர்த்தி
நவில்கவிக்கனு கூலனே
பவமொழிப்பாய்பாச பவமொழிப்பாய்
தவமிடமிகும்பாரசத்தி வேலனே (ஞான)

---

சாமிவேளகாதுரா-சாமி
என்றஜாவளியின் வர்னமெட்டு
உகூ-இ-ம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ரூபகம்

பல்லவி.

ஞானதேவா வென்முன்வா ஞான

அநுபல்லவி

வானவர்கள் வந்துபோற்றிசெய்
வன்னமயில் வாகனகுகா (ஞான)

சரணங்கள்.

சந்தனசு கந்ததோளனே
வந்தவர விந்ததாளனே (ஞான)
பாசபந்த மோசனவீரா
நேசமாய்முரு கேசவடீரா (ஞான)
மௌனகுரு ருத்ரமூர்த்தி
நவில்பரக்கிரி நாதசண்முகா (ஞான)

---

ஓரடீணிமனிசாமினிதேவே — சாமினிதேவே.
என்றஜாவளியின் வர்னமெட்டு.
௩௰ - இ-ம்-கமாஸ் - தாளம் - ரூபகம்.

பல்லவி.

மாமயின்மேநட மாடியதேவா
ஆடியதேவா தேடிநீவாவா

சாமவினோதா சண்முகநாதா
காமவிகாதா கருணைதாதா (மாமயின்)
சங்கரிபாலா சற்குணசீலா
துங்கவிசாலா சூர்குலகாலா (மாமயின்)
தேசிகவீரா ஜெகவுதாரா
மாசுகதீரா வரகுமாரா (மாமயின்)
மௌனகுரு ருத்ரமூர்த்தி
நவில்சர்வேசா ஞானப்ரகாசா (மாமயின்)

—(—)—

காந்தனைக்காத்தாரே - பிட்டிரலாரே-
என்றஜாவளியின்வர்ணமெட்டு.

௲க - இராகம் - கமாஸ் - தாளம் - சாபு.

பல்லவி.

தஞ்சமென்றுனைத்தா னம்பினேன்மெய்யனே

சரணங்கள்.

குஞ்சரிமணவாளா கஞ்சமென்மலர்த்தாளா
சஞ்சலந்தனைமாற்றும் தேவா (தஞ்சமென்)
அண்டர்பணியும்பாதா அத்துவிதவினோதா
சண்டன்வராமற்காக்கும் தேவா (தஞ்சமென்)
மௌனகுருருத்ர மூர்த்திதாசன்புகல்
கவிக்கருள்புரிந்திடும் தேவா (தஞ்சமென்)

போபோமனே-பொம்மனே-பாமரோவானி
என்றஜாவளியின்வர்ணமெட்டு.

௲உ-இ-ம்-கமாஸ்-தாளம் இந்துஸ்தானி. ஆதி.

பல்லவி.

தாதாமுருகையமே-நின்பாதமலர்-தாதா

அநுபல்லவி.

வேதாதிருச்செந்தூர்வாழ்-வேலவனேகருணை,

சரணங்கள்.

படிமீதினிலே பாவையர்மையலா
லடிவேன்மயங்குவேனோ அத்தாயான்வேண்டும்வரந் (தாதா)
கும்பமுலைமின்னார் கொடுஞ்சுகவாரியை
நம்பிக்கெட்டலைவேனோ ஞாலந்தனிற்கதி (தாதா)
மௌனகுருருத்ர மூர்த்திதாசன்போற்றுஞ்
சிவசரவணபவ தேவாமெய்ஞ்ஞானசுகம் (தாதா)

சாமிராடேமந்துனே-சானரோ-தோடித்யாவே
என்றஜாவளியின்வர்ணமெட்டு

௲௩-இ-ம்-இந்துஸ்தானிபியாக்-தாளம்- இந்துஸ்தானி-ஆதி

பல்லவி.

ஞானதண்டாயுதனே-நம்பினேன்-க்ருபைதாதா

அநுபல்லவி.

வானவர்கள்போற்றும்பாதனே
நம்பினேன்க்ருபைதாதா (ஞானதண்

சரணங்கள்.

மோனகுருவானசீலா தானவர்காலாகுஞ்சரி
கானவல்லோலா நம்பினேன்க்ருபைதாதா (ஞானதண்)
ஆதியந்தங்கடந்தநாதா பேதைமேல்வாதா-மெய்ஞ்ஞான
போதவினோதா நம்பினேன்க்ருபைதாதா (ஞானதண்)
மௌனகுருருத்ரமூர்த்தி கவிக்கருள்வோனே-வளருஞ்
சிவபெருமானே நம்பினேன்க்ருபைதாதா (ஞானதண்)

---

அந்தலோனேதெல்லவாநேலலனயேமிசேதுனே
என்றஜாவளியின்வர்னமெட்டு.
௩௪ இ-ம்-இந்துஸ்தானி-பியாக்-தாளம்-ரூபகம்

பல்லவி.

ஜாலமென்னவேலனே
தருணம்வந்தருள்செய்குவாய்

சரணங்கள்.

அம்புவிதனிற் கும்பமென்முலை
யார்வலைதனில் வெம்பினேன்
எம்பரனேயுன் செம்பொற்பாதத்தை
யென்றுமெய்யென நம்பினேன் (ஜாலமென்)

சிறுவன்கொடிய வறுமைதன்னைத்
தீர்த்திடமனம் வல்லையா
அறுமுகவனே யொருதிக்கிங்கெனக்
காகிருக்கிறர் சொல்லையா (ஜாலமென்)

மௌனகுரு ருத்ரமூர்த்தி
வாழ்த்துஞ்செந்தூர் வாசனே
சிவசரவண பவகுருபா
தேசிகமுரு கேசனே (ஜாலமென்)

---

மானினிமனஸ்யாலகாகதே-ஒ
என்றசாவளியின்வர்ன்மெட்டு.
௩௫-இ-ம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பாதுகாத்திடவேணுமையனேயெனைப்
பாதுகாத்திடவேணுமையனே

அநுபல்லவி

வேதனேசெந்தூர்- மேவுமெய்யனேயெனைப்(பாதுகா)

சரணங்கள்.

இன்னமென்மீ தென்னகோபஞ்
சின்மயகுரு தேசிகா-எனைப்(பாதுகா)
மடமைநெஞ்சம் வசமிலேயே
கடினசூரர் காலனே-எனைப்(பாதுகா)
மவுனகுரு ருத்ரமூர்த்தி
கவிக்கருளுங் காரண-எனைப்(பாதுகா)

---

போபோவேசெலியா-போபோவேசெலியா.
என்றஜாவளியின்வர்ணமெட்டு
௩௬-இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-இந்துஸ்தானி-ஆதி
பல்லவி,
கூர்வேலாயுதனே கூர்வேலாயுதனே
அநுபல்லவி.
பார்புகழுங் (கூர்வேலா)
சரணங்கள்

சங்கரிவரபாலா இங்கிதகுணசீலா
துக்கமறைமூலா பார்புகழுங் (கூர்வேலா)
ஞானவசிகரா மோனக்ருபாகரா
கானமனோகரா பார்புகழுங் (கூர்வேலா)
மௌனகுருருத்ர மூர்த்திதாசன்றுதி
சிவகுருபரா பார்புகழுங் (கூர்வேலா)

---

சாமிகாநதோ - மாட்லாடதெந்துரா
என்றஜாவளியின்வர்ணமெட்டு
௩௭ - இராகம் - கமாஸ் - இந்துஸ்தானி-ஆதிதாளம்.
பல்லவி,
ஞானதேசிகா-வாதா-ஓகந்தரனே
சரணங்கள்.

சரவணபவதேவா-தாரகமயசிவ
வரதாபழனிவேலவா (ஞானதேசிகா)
திருவளர்குகநாதா-சித்தமிரங்கியென்முன்
வருவாயேகூர்வேலா (ஞானதேசிகா)
மௌனகுருருத்ரமூர்த்திதினம்போற்றுங்
கனநீதவடிவேலா (ஞானதேசிகா)

---

இந்துமுகிவானிகிமன-சிந்துலதாயா-ஏமந்துநேமாயா,
என்றஜாவளியின்வர்னமெட்டு,
ருஅ இராகம் - இந்துஸ்தானி-பியாக் ரூபகதாளம்.
பல்லவி,
தஞ்சமுன்றன்பாதமேகதி-சதுர்மறைமூலா
நற்கதிதரும்வேலா
அநுபல்லவி,
வஞ்சவரக்காஞ்சியோடமுன் வதைத்திட்டசீலா
தேவகுஞ்சரிமணமருவுமிங்கித
குருபரலோலா-பூங்கோமளவேலா (தஞ்சமுன்)
நம்பினோக்கைசோரவிடுதல்-ஞாயமோமெய்யா
சிவ-தம்பிரானுக்குக் குடிலைப்பொருள்முன்
சாற்றியதுய்யா-நீ-தற்கார்முருகையா (தஞ்சமுன்)
அண்டுமெந்தனுக்கின்பசுகந்தந் தாளலாகாதா
நிதந்-தொண்டுபுரியுமடிமையென்றெனைத்
தோணுதோவேதா-அத்-துவிதமெய்ப்போதா (தஞ்சமுன்)
மௌனகுருருத்ரமூர்த்திசெந்தமிழ்-மலர்புனைவாசா
குற-வனிதைதழுவும் மங்களாகரா
வரதவிசாகா-நல்-வழியருள்த்யாகா (தஞ்சமுன்)
ஆயிரிமா-பன்சிநாகி
என்றஜாவளியின்வர்னமெட்டு
ருகூ-இராகம்-கமாஸ்-இந்துஸ்தானி-ஆதிதாளம்.
பல்லவி.
வேலவனே - என்முன் - வாவா
அநுபல்லவி.
சதாசுகா-என்முன் வாவா (வேலவனே)
சரணங்கள்.
ஞானவிநோதா-மோனவதீதா
தானவனே-என்முன்-வாவா (வேலவனே)
சூரர்குலகாலா-தூயவிசாலா
தாரகனே-என்முன் வாவா (வேலவனே)
மௌனகுருருத்ரமூர்த்தியெந்நாளும்
வாழ்த்தும்பாதா-என்முன்-வாவா (வேலவனே)
ஓ-ரமணீமனிசாமினித்யாவே
சாமினித்யாவே-காமினிபோவே
என்றஜாவளியின்வர்னமெட்டு
௩0-இராகம்-கமாஸ்-ரூபகதாளம்.
பல்லவி.
வாரணகேதன-கோமளதேகா
கோமளதேகா-தாமவிசாகா

அநுபல்லவி.

ஆரணரூபா-காரணதீபா
பூரணதீபா-வீரப்ரதாபா (வாரணகே)
சொன்னதிகேளா-தென்னபெற்றுளா
பன்னிருதோளாயென்னைநீயாளா (வாரணகே)
நொந்துளம்வாடி யுந்தனைநாடி
செந்தமிழ்பாடி வந்தனன்றேடி (வாரணகே)
குஞ்சரிபாக தஞ்சம்வைபோகா
வஞ்சகமாகா ரஞ்சிதயோகா (வாரணகே)
கல்வியுண்டாக்கு கலியைப்போக்கு
வல்வினைநீகுவந்தருள்தேக்கு (வாரணகே)
மௌனகுருருத்ரமூர்த்தி
தினமும்போற்றுஞ்சிற்பராசீர்த்தி (வாரணகே)

சாமிவேளைகாதுரா- சாமிவேளைகாதுரா
என்றஜாவளியின்வர்னமெட்டு
சக-இராகம்-இந்துஸ்தானி-காபி-ரூபகதாளம்

பல்லவி.

சாமி-பாதுகாரையா-சாமிபாதுகாரையா.

அநுபல்லவி.

பூமியெல்லாம்போற்றும்பாதனே
பூசுரர்க்கருள்போதநீதனே (சாமிபாது)
அத்துவிதமுத்தையலோலா
முத்திதாநத்தினேன்வேலா (சாமிபாது)
ஞானவரதனைதூயனே
வானவர்பணிமோனசேயனே (சாமிபாது)
மௌனகுருருத்ரமூர்த்தி
தினந்துதிசெய்செந்திலாதிபா (சாமிபாது)

பேகோ-ஜெமுனமே-பஸ்காயோ-பனசீரி
என்றஜாவளியின்வர்னமெட்டு.
சஉ-இராகம்-கமாஸ்-சாபுதாளம்.

பல்லவி.

வேலாயுதநாதாவருவாயேகதிநீயே

அநுபல்லவி.

சீலமுருகேசாகோலஜெகதீசா (வேலா)

சரணங்கள்

மேலோர்வாழ்த்தும்வேதவினோதா
காலாயுதாகாரணஞானகுமாரா (வேலா)
சிந்தாகுலந்தீர்த்திநேரம்
கந்தாவந்தாளகாரணஞானகுமரா (வேலா)
மௌனகுருருத்ரமூர்த்தி
கனிவுடன்சொல்காரணஞானகுமரா (வேலா)

பழனியாண்டவர்ஜாவளிமுற்றிற்று.

உ

# விளம்பரம்.

—(-)—

இதனால்சகலமானவர்களுக்கும் தெரியப்படுத்துவது என்னவென்றால் பழனிஸ்தளத்தில் வசிக்கும்தமிழ்சக்கிரவர்த்தியாகிய-ம-ரா ரா ஸ்ரீ-மு-மாம்பழக்கவிச்சிங்கநாவலர்-அவர்களால் இயற்றிய கீதாமிர்தசாரமென்னும் - கீர்த்தனையும் - பழனிஆண்டவர்ஜாவளியும்- நடேசர்ஜாவளியும் -இரங்கநாயகர்ஜாவளியும் -திருப்பதி-தேர்வண்டிக்கால்சரித்திரகீர்த்தனையும் - இதுகளை-கெவர்ன்மெண்டால் - 1867 - ஹத்திய - 25 - வது. ஆக்டின்-20 - வது - பிரிவில் - 6 - வது. விதியின்படி-ரிஜிஸ்டர்-செய்து (ஆல்ரயிட்ரிஜர்வ்ட்)ஆகியிருக்கின்றபடியால் இதுகளை - எந்த அச்சுக்கூடத் தலைவர்களும் மற்றவர்களும் - சித்தூர் வீராசாமினாயுடு அவர்களுடைய அனுமதிபெற்றுக்கொள்ளாமல் எவ்விதத்திலும் - எவ்விதபாஷையிலும் - மொழிபெயர்த்து அச்சிடக்கூடாது- அப்படிமீறி அச்சிடுவாராகில் - மேல்கண்டஆக்டின்பிரகாரம் - கோர்டார்மூலமாய்சட்டப்படி - விதிக்கப்பட்ட நஷ்டத்திர்க்கும்தெண்டனைக்கும் உட்படுவார்கள்.

மேலும்-ம ரா-ரா-ஸ்ரீ-சுப்பரமணிய பண்டிதர்போட்டபதார்த்தகுணசிந்தாமணியை அச்சுக்கூடத்தலைவர்கள் இரண்டுபதிப்பு - வரயில்-அச்சிட்டார்கள் மூன்றும்பதிப்பு அச்சிடும்போதுமேல்படி பண்டிதர்-வழக்கிட்டு - எம்மாதிரியாககோர்டார்மூலமாய் - தீர்மானம்-பண்ணிக்கொண்டாரோ - அம்மாதிரியாகனான்வழக்குத்-தொடுக்கப்படும்ஆகையால் இந்தவிளம்பரத்தில் - விவரமாகதெரிவித்தேன்.

இப்படிக்கி
சித்தூர்
வீராசாமிநாயுடு.
வித்தியாவினோதஅச்சுக்கூடத்தலைவர்

## புஸ்தக விளம்பரம்.

இதனாலன்பர்கள் யாவருக்கும் தெரியப்படுத்துவது யென்னவென்றால் சென்னப்பட்டணம் - புரசைபாக்கத்தைச்சார்ந்த நாராயணபாளயம்வடமலைப்பிள்ளைவீதியி - உ - வது நெம்பருடைய வீட்டில் வித்தியாவினோத அச்சுக்கூடத்தலைவராகிய சித்தூர் விராசாமினாயுடுயிடத்திலும் - ஷெயாருடைய குமாரர் சி-வீ - கேசவுலுநாயுடு அவர்களால்-கோயமுத்தூர் பெரியகடைவீதியில் வைத்திருக்கும்-புஸ்தகஷாப்பில் தமிழ் - தெலுங்கு - கிரந்தம்-மகம்மதுபுராணங்கள் பதினெண்சித்தர்கள் திருவாய்மலர்ந்தருளிய வைத்திய சில்லரைகளும்-சோதிடசாஸ்திரங்களும் விலைசரசமாய் விர்ப்பனைசெய்து வருவதால்வியாபாரிமுதலானவர்கள் மேற்கண்டயிடங்களில்-விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கி
சி - வீ - கேசவுலுநாயுடு.
குமூஸ்தா இ-ஒன்னையகவுண்டர்